நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு
வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண். சிசி. 268 **/ 2021**

வழக்கு சாட்சி- **அ.சா.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | மீனா | : | ஜாதி | |
| தந்தை பெயர் | ராஜேந்திரன் | : | தொழில் | கணக்கீட்டாளர், மின்சார அலுவலகம் |
| கிராமம் | அன்பில் | : | சமயம் | |
| தாலுக்கா | திருவையாறு | : | வயது | 28/2023 |

(எதிரி ஆஜர் )

**<u>நாள் : 05.06.2023</u>**

**முதல் விசாரணை:**

**1)** நான் திருவையாறு தாலூக்கா அன்பில் கிராமத்தில் குடியிருந்து மின்சார அலுவலகத்தில் கணக்கீட்டாளராக பணி புரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 07.08.2021 ஆம் தேதியன்று காலையில் வீட்டிலிருந்து கிளம்பி எனது கணவர் அலுவலகத்திற்கு சென்றார். 10.00-10.15 மணி அளவில் எனது உறவுக்காரர் எனக்கு போன்மூலம் அழைத்து பூண்டி ஆர்ச் புதுப்பாலம் அருகே டாடா ஏசி வாகனம் (வாகன பதிவெண்.1769) அதிவேகமாக வந்து மோதியதில் என் கணவருக்கு கை, கால், முகம் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு விபத்துக்குள்ளாகிவிட்டதாக கூறினார்கள். மேலும் அவரை திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்துள்ளதாகவும், மேலும் அவரை அங்கிருந்து முதலுதவி சிகிச்சை பெற்ற பிறகு திருச்சி பிரண்ட்லைன் மருந்துதுவமனைக்கு அழைத்து செல்ல போவதாகவும் கூறினார்கள்.

2) அதன்பிறகு நான் கிளம்பி திருச்சி பிரண்ட்லைன் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். 4 நாட்கள் சிகிச்சையில் இருந்தார், அதன் பிறகு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் நான் அந்த புகார் வாக்குமூலம் அளித்ததுதான். **அ.சா.ஆ.1/அ.சா.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

(ஒம்./-**திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு **)**